தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக

கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்


மரம் 12 செப்டம்பர் 2012 கனி 10



Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2012-2014
Posted at Batlagundu Post office on 10 th Sep. 2012


To

முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது
எபிரெயர் 7:18


*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA






BATLAGUNDU CHURCH OF CHRIST
*MEETS HERE*
17-2-102 D/5, RAJAN NAGAR, BATLAGUNDU-624 202,
DINDIGUL DISTRICT, S.INDIA.
Phone : 04543 263278, Mobile: 94435 58041
E-mail: arjunanglory@gmail.com
Website: www.thewordofchristindia.com



*Our Radio & TV Programs*
SriLanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &
Tamilan TV
on Monday 6.00 A.M &
Saturday 6.15 P.M

- இம்மரம் கிளையற்ற அடிமரமாக, 18-24 மீட்டர் உயரம் வளரக்கூடியதாகயிருக்கிறது.
- இம்மரம் எபிரெய ஜனங்கள் வாழ்ந்த இடத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்து முழுவதும் அவர்களுக்குப் பயனுள்ளதாகயிருந்தது.
- கூடாரப்பண்டிகை நாட்களில் இம்மரத்தின் இலைகள் அலங்காரத்திற்கென்று பயன்படுத்தப்பட்டது (லேவி.23:40).
- இஸ்ரவேலர் ஏலிமில் பாளைய மிறங்கிய இடத்தில் 70 பேரீச்சமரங்கள் இருந்தது - யாத்.15:27




- மனதில் பதியத்தக்க இம்மரத்தின் தோற்றமும் கனி நிறைந்ததுமான இந்த பேரீச்சை மரம் செழிப்பிற்கும் அழகிற்கும் அடையாளமாகயிருக்கிறது (சங்.92:12).
- சாலொமோன் ஆலயத்திலும் எசேக்கியேல் புத்தகத்திலும் இது குறிப்பிடப்பட்டுள்ளது (1இரா.6:29).

## வேதாகமத்தில் 6 மனிதர் யூதாஸ் என அழைக்கப்பட்டனர்
## 6 Men called "Judas" in the Bible



1. இயேசுவின் சகோதரர் - மத்.13:55, மாற்.6:3, யூதா.1
1. அப்போஸ்தலன் லேபேயு என்று அழைக்கப்பட்ட ததேயு, யாக்கோபின் சகோதரன் - மத்.10:3, மாற்.3:18, லூக்.6:16, யோவா.14:22, அப்.1:13
3. யூதாஸ்காரியோத்து - யோவா.6:71
4. கலிலேயனாகிய யூதா - அப்.5:37
5. தமஸ்குவை சேர்ந்த யூதா - அப்.9:11
6. பர்சபா என்ற யூதா - அப்.15:22-32

**இந்த ஆறு பேரில் நீங்கள் எவரைப் போன்றவர்கள்?**

"நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில், கர்த்தர் தமது ஜனத்தை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார்" யூதா 5.

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



# வேத அறிவுப் போட்டி எண்: 145

போட்டியாளாளர்கள் கவனத்திற்கு

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25 ஆம் தேதிக்குள் "தி வோர்ட் ஆப் கிரைஸ்ட்' முகவரிக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.

1. மக்லாள், திர்சாள், ஒக்லாள், மில்காள், நோவாள் என்பவர்கள் யாருடைய குமாரத்திகள்?
2. இயேசுகிறிஸ்துவினிமித்தம் எப்பாப்பிராவும் பவுலோடு காவலில் வைக்கப்பட்டிருந்தானா?
3. ஆரோனுக்குப் பின்பு அவன் ஸ்தானத்திலே ஆசாரியனானவன் யார்?
4. இயேசுவானவர் மாம்சத்திலிருந்த நாட்களில் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி விண்ணப்பம்பண்ணினாரா?
5. சீலோவிலே கர்த்தருடைய சந்நிதியில் சீட்டுப்போட்டு இஸ்ரவேல் புத்திரருக்கு தேசத்தை பங்கிட்டவன் யார்?
6. சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற எதற்கு ஒப்பாயிருக்கிறான்?
7. உங்கள் பார்வைக்குச் சரிபோனபிரகாரம் அவர்களுக்குச் செய்யுங்கள் என்ற கிழவன் எத்தேசத்தான்?
8. ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, நீங்கள் எங்கே அடங்கியிருக்கவேண்டும்?
9. நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள் என்றவன் யார்?
10. இந்தக் கூடாரத்தில் நான் இருக்குமளவும் உங்களை நினைப்பூட்டி எழுப்பிவிடுவது நியாயமென்று எண்ணுகிறேன் என்ற அப்போஸ்தலன் யார்?

## அப்.யூதா எழுதின பொதுவான நிருபம்
## The General Epistle of Jude

*1. **பிரியமானவர்களே,** பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்த வான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப்போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது - யூதா 3.*

*2. **நீங்களோ பிரியமானவர்களே,** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள் - யூதா 17.*

*3. **நீங்களோ பிரியமானவர்களே,** உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள் - யூதா20,21.*



**எவர்களுக்கு ஐயோ!**

காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள் - யூதா 11

சிறுவர் பகுதி

## விசுவாசமான கப்பலை சேதப்படுத்தியவர்கள்

**வேத பகுதி: 1தீமோத்தேயு 1:19,20**



சிறுவர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்கள்.

முதல் நூற்றாண்டிலே விசுவாசமாகிய கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்தியதாக பவுல் விசுவாசத்தில் உத்தம ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அப்படி எந்த விசுவாசமான கப்பலைச் சேதப்படுத்தினார்கள் என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். சபையை விசுவாசமான கப்பல் என்று பவுல் குறிப்பிடுகிறார். விசுவாசிக்கிறவர்கள் இந்த கப்பலாகிய கிறிஸ்துவின் சபையில் இருப்பார்கள். நோவா ஒரு பேழையை உண்டுபண்ணினார் அதுவும் விசுவாசபேழைதான் ஏனென்றால் மழை இல்லாத காலத்தில் பேழையை கட்டினார். உலகம் ஜலத்தினால் அழியப்போகிறது என்று சொல்லியும் ஜனங்கள் நம்பவில்லை. தேவன் மழையை 40 நாட்கள் வருஷிக்கப்பண்ணியபோது ஐயோ! ஐயோ! என்று சொல்லி கூக்குரலிட்டிருக்கக்கூடும். நோவாவும் அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள்.

இன்றைக்கு இந்த விசுவாசமான பேழையை அதாவது கப்பலை இமெனேயு, அலெக்சந்தர் போன்றோர் சேதப்படுத்துகிறார்கள். எப்படியென்றால் சபையில் பிரிவினையை ஏற்படுத்துவது. கப்பலை சேதப்படுத்துவதற்குச் சமம். அப்படி சேதப்படுத்தினால் என்னவாகும்? கப்பல் தண்ணீரில் மூழ்கிவிடும் இல்லையா! அதைப்போல சபையை பாழடிக்க எண்ணம் கொள்கின்றார்கள். இப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுங்கள் என்கிறார். பவுல், அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தார். பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். ஆகையால் நாமும் அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுப்போம். சில சமயங்களில் நாம சொன்னபடி கேட்காவிட்டால் அப்பா, அம்மா இப்படி சொல்லுவாங்க, அந்த கரடிகிட்ட இவனை புடிச்சுகொடுத்திடுவோம் என்று, இல்லையா? ஆமாம் நாம் விசுவாசத்தின் கப்பலை சேதப்படுத்தாது, அது விசுவாசத்தில் முன்னோக்கி செல்வதற்கு நாம் உதவியாயிருக்கணும். இருப்பீங்களா!

**மனப்பாட வசனம்:**

“தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்”-1பேதுரு5:8




# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
# THE WORD OF CHRIST

**புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்**

**மரம் - 12 செப்டம்பர் - 2012 கனி - 10**


**ஆசிரியருரை**

## அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம்
## An Evil Heart of Unbelief



இரண்டு வகையான இருதயத்தைக் குறித்து இந்நாளில் தியானிக்கவுள்ளோம். ஒன்று சுத்த இருதயம் மற்றொன்று பொல்லாத இருதயம். **1.சுத்த இருதயம் - Pure Heart.** இருதயத்தில் சுத்தமாயிருக்கும்போது அதனுடைய செயல்பாடுகளும் சுத்தமாயிருக்கும். ஆண்டவர் இயேசு தம்முடைய மலைப்பிரசங்கத்தில், “இருயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” என்றார் (மத்.5:8). பாக்கியவான்கள் என்றால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். சுத்தமான இருதயதை உடையவர்கள். இவர்கள் ஆவிக்குரிய கண்களினால் தேவனைத் தரிசிப்பார்கள். இந்தவிதமாக இருயத்தில் சுத்தமுள்ளவர்கள் யார்? அவர்களை நாம் எப்படி அடையாளம் கண்டுகொள்ளமுடியும்? என்ற கேள்விகள் நமக்குள் எழும்புகிறதல்லவா, தேவனுடைய வசனம் மனிதனுடைய இருதயத்தை, நிலத்திற்கு ஒப்பிட்டு பேசுகிறது. அதில், “நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்” என்று லூக்.8:15-ல் சொல்லப்படுகிறது. தேவனுடைய வசனத்தைக் கேட்டு அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துக்கொள்கிறவர்களே சுத்த இருதயமுள்ளவர்களா யிருக்கிறார்கள். அந்த வசனம் தேவனுடைய வார்த்தையையாயிருக்கிறது. அது அவர்களை சரிசெய்கிறது. நடக்கவேண்டிய வழியை காண்பிக்கிறது.

“பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய

கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது'' (யாக்.3;17,18). இதைப் பெற்றுக்கொள்கிறவர்கள் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைகின்றனர். சுத்த இருதயத்தோடு கர்த்தரை ஆராதிக்கின்றனர். அவர்களுடைய செயல்பாடுகளும் சுத்தமானவைகளாகவே இருக்கிறது.

ஆகையால், ''சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும், அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்'' ஏனெனில், ''அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்'' என்று தீத்.1:15,மற்றும் 16-ம் வசனங்களில் வாசிக்கிறோம். நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்? தேவனை அறிந்திருக்கிறோம் என்று கிரியைகளினால் அவரை மறுதலிக்கிறீர்களா, வானமும் பூமியும் அவருடைய கரத்தின் கிரியைகளை அறிவிக்கிறது. நாமும் அவரால் உண்டாக்கப்பட்டுள்ளோம். அவர் எண்ணிமுடியாத காரியங்களை செய்கிறார். அவரை நீங்கள் உங்களுடைய சுத்தமான இருதயத்திலிருந்து ஆராதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுயை ஆராதனையை தேவன் அங்கீகரிப்பார். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ''அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு'' என்று எழுதுகிறார் (2தீமோ.2:22). நீங்கள் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே சேர்ந்து தொழுதுகொண்டுவருகின்றீர்களா? ஏதோ ஒரு ஆராதனைக்கு போய் வருகிறேன் என்று சொல்கிறீர்களா, அல்லது பக்கத்தில் உள்ள ஒரு சபைக்குப்போகிறேன் என்று சொல்கிறீர்களா? நீங்கள் போகக்கூடிய சபையில் சுத்தஇருதயத்தோடு கர்த்தரை தொழுதுகொள்கிறார்களா? அப்படிப்பட்ட தொழுகையை தேவன் அங்கீகரிக்கிறார். அங்கேதான் நீதியையும் விசுவாசத்தையும், அன்பையும் சமாதானத்தையும் நீங்கள் அடையமுடியும். மற்றஇடங்களுக்குச் செல்வீர்களானால் அவர்களுடைய அவிசுவாசம், அவர்களுடைய அசுத்தம் உங்களைப் பற்றிக்கொள்ளும். அவர்கள் இம்மைக்காக கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள்.

இவர்களைப் பற்றி யூதா சொல்லும்போது; ''இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும் தங்கள் அவமானங்களை



# ஆதி சபை வரலாறு

*-John S.Nathan*
*9444443378*



2. பாலிகிராப் (69-156AD) Poly Card அவர்களின் நண்பரும், அன்பின் சீடர் யோவானின் மற்றும் ஒரு மாணவருமான இக்னேசியஸ் Ignatius (67-110AD) என்பவர் அந்தியோகியா சபை ஊழியராவர். அந்நாளிலே டிராஜன் (Trajan) மன்னன் அந்தியோகியாவிற்கு வந்து அவனை கைதுசெய்து, அவரின் வழக்கை தானே தலைமை தாங்கி விசாரித்து, ரோமாபுரியில் அவரை கொடிய காட்டு மிருகங்களுக்கு இரையாகும்படி அவரை தண்டித்தான். ரோமுக்கு போகும் வழியில் ரோம அதிகாரிகள் அங்கு வாழும் கிறிஸ்தவர்கள் அவருக்கு மன்னிப்பிற்காக யாரும் வேண்டாமென்றும், பாலிகிராப்பை போன்று தானும் தனக்காக உயிர் வாழ்வதைவிட ஆண்டவருக்காக இரத்தசாட்சியாக மரிப்பதையே தெரிந்துகொண்டார். காட்டு மிருகங்கள் என்னை தாக்கி, பீறிவேகமாக என்னை கடித்து குதறி என் எலும்புகளை உடைக்கட்டும். அப்படியாக என்னை தடுத்தால் நானே அவைகளிடம் சென்று மாளுவேன். இவ்விதமாக நான் சீக்கிரத்தில் இயேசுவுடன் சேருவேன் என்று கூறியவுடனே மிக்க மகிழ்ச்சியுடன் இரத்த சாட்சியாக மரணமடைந்தார்.

3. பாப்பியாஸ் Papias (70-155AD) இவரும் அன்பின் சீடரான யோவானின் மாணவர். இவர் எபேசுவுக்கு 100 மைல் தூரத்திலுள்ள கிராபோலீஸ் (Hiea Polis) சபை ஊழியர். இவர் இயேசு உபதேசித்த அதே வார்த்தைகளை மக்களுக்கு விவரமாய் போதித்தார். இவரும் இரத்தசாட்சியாகவே பெர்கமம் Pergamum என்ற இடத்தில் பாலிகிராப் (69-155AD) மரித்த காலத்திலே இவரும் மரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக பாலிகிராப், இக்னேசியஸ், பாப்பியாஸ் போன்றவர்கள், அப்போஸ்தலர்களைப்போன்று சங்கிலி தொடர்புகளாக ஒருவர் பின் ஒருவராய் இரத்தசாட்சியாய் மகிழ்ச்சியுன் மரித்தனர்.

-தொடர்ச்சி அடுத்த இதழில்

**கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் - பிலிப்பியர் 1:21**

# நாம் குழந்தைகள் அல்ல...-Prabakaran



தன் இளம் பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது (புலம்பல் 3:27). நாம் இளமையிலே துன்பத்தை அனுபவிப்பது நல்லது, ஏனெனில் பிற்காலத்தில் நமக்கு அதிக துன்பம் வந்தாலும் தாங்கிக்கொள்ளமுடியும். நாம் இளமையில் அதிக துன்பம் அனுபவித்தால் வயதான காலத்தில் நமக்கு துன்பம் வரும்போது அதை நம்மால் தாங்கிக் கொள்ளமுடியும். இல்லையென்றால் நாம் மிகவும் கஷ்டப்படுவோம்.

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழக்கற்றுக்கொள்ள வேண்டும். ஆசை எல்லையற்றது, பொருள்களின் மேல் ஆசை வைத்தால் அதை நாம் அனுபவிக்க முடியால் கூட போய்விடும். பல நேரங்களில் நாம் ஆசைப்பட்டது கிடைக்கவில்லையென்றால் நம்மால் அதை தாங்கிக் கொள்ளவும் முடியாது.

எல்லாவற்றையும் தேவனுடைய சித்தத்திற்கு விட்டுவிட வேண்டும். நாளை நடப்பதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். தேவனுடைய சித்தத்தை வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்திடவேண்டும். இந்த உலக வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். இந்த உலக வாழ்க்கை கொஞ்ச நாட்கள் தான். ஆனால் மரணத்திற்கு பின் கிடைக்கும் நித்தியமான வாழ்க்கை நமக்கு நித்திய ஜீவனைக்கொடுக்கும். இது எல்லையற்றது. ஆகவே நமக்கு நித்திய ஜீவன் தான் மிகவும் முக்கியம்.

இந்த உலகவாழ்க்கையில் வரும் வெற்றி தோல்வியைக் கண்டு பயப்படவேண்டாம். நாம் சோர்ந்துபோகாமல் நன்மைசெய்து தேவ சித்தம் செய்வோம். ஆகவே நம்மால் இயன்றவரை மற்றவர்களுக்கு உதவி செய்து வாழவேண்டும். ஆம் பிரியமானவர்களே! நாம் சிறுவர்களாக, குழந்தைகளாக மணலில் வீடு கட்டிவிளையாடுபவர்களாக இல்லை. அப்படி இருப்போமானால் நம்மைப்பார்த்து அநேகர் கேலிசெய்வார்கள். ஆகையால், "நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்" (1பேது.2:3).

மேலும், "காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது; நீங்கள் பலமான ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரணவயதுள்ளவர்களுக்கே தகும்" (எபி.5:12-14).



நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது என்கிறார்". ஆகையால் "மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்" (1தீமோ.5:22). அவனால் தான் நான் தவறான வழியில் சென்று விட்டேன் என்று சொல்லுகிறவர்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். உலகத்தில் 95 சதவிகித மக்கள் மற்றவர்களைப் பார்த்துத்தான் கெட்டுப்போகிறார்கள். நல்லவர்களை பார்க்கக்கூடியவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். ஆகையால் மற்றவர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கும் பாவத்திற்கும் உட்படாமல், உங்களை முதலாவது சுத்தவானாகக் காத்துக்கொண்டு சுத்த இருதயத்தோடு கர்த்தரை தொழுதுகொள்ளுகிற பரிசுத்தவான்களோடு உங்களையும் இணைத்துக்கொண்டு தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்கள். அப்பொழுது பிதாவாகிய தேவன் உங்களுடைய தொழுகையை ஏற்றுக்கொள்வார். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லை என்று எபிரெய புத்தகத்தில் வாசிக்கிறோம். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.

**2.பொல்லாத இருதயம் Evil Heart.** நல்ல இருதயம் நாளடைவில் பொல்லாத இருதயமாக மாற்றப்படுகிறது. பிறக்கும்போது எல்லோரும் நல்லவர்களாகவே பிறக்கிறார்கள். தீயவர்களாக எவரும் பிறப்பதில்லை. அவரவருடைய சுற்றுப்புற சூழல், பிறந்த குடும்பம், சிநேகம் இப்படிப்பட்ட சூழ்நிலையின் காரணமாக அவர்களுடைய இருதயம் பொல்லாத இருதயமாக மாற்றப்படுகிறது. ஆகையால் எபிரெயர்களுக்கு எழுதின ஆசான்; "சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள்" என்கிறார் (எபி.3:12,13). பொல்லாங்கன் பொல்லாத இருதயத்தை உங்களில் உருவாக்குவான். ஆகையால் பாவத்தின் வஞ்சனை அதாவது பாவத்தினால் ஒருவனும் ஏமாந்து போய்விடாதபடி ஒருவருக்கொருவர் புத்திசொல்லுங்கள். ஐயோ! அவன் என்னை மோசம் போக்கிவிட்டான் என்று மோசம்போனதற்கு பின்பு கத்தி கூப்பாடு போடுவார்கள். ஆகையாலே எபிரெய ஆசான், உங்களில் ஒருவனாகிலும் என்ற ஒரு வார்த்தையை எழுதுகிறார். இன்றைக்கு அநேகர் வஞ்சிக்கப்பட்டுப்போய்விடுகிறார்கள். அவர்களுடைய இருதயம் பின்மாற்றமடைகிறது. அவிசுவாசம் வளர ஆரம்பிக்கிறது. வீழ்ந்துபோகிறார்கள். ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுகிறவர்களைக்குறித்து நாம்

எச்சரிக்கையாயிருந்து, அப்படிப்பட்டவர்களை விட்டு நாம் முதலாவது விலகவேண்டும். அவர்களை எப்படியாவது ஆதாயம் செய்துவிடலாம் என்று நினைக்கலாம் ஆனால் அப்படிப்பட்டவர்கள் உங்களை தங்கள் வழியில் இழுத்துக்கொள்ளாதிருக்கப்பாருங்கள்.

பொல்லாத இருதயமுடையவர்கள் வழியருகே விதைக்கப்பட்ட நிலத்தைப்போன்றவர்கள். ‘‘வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்குப் பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான்’’ (லூக்.8:12). வழியருகே விதைக்கப்பட்டவர்கள் எல்லோரும் இப்படியே இருக்கிறார்கள். ஏனெனில் அவர்களில் வசனம் தங்குகிறதில்லை. பிசாசு அவ்வசனத்தை எடுத்துப்போட்டான். ஆகையால் பொல்லாத இருதயமே அவர்களுக்குள் நிலைத்திருக்கும். இப்படிப்பட்டவர்கள் ‘‘பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்’’ என்று எச்சரித்து பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதியதை 2தீமோ.3:13-ல் வாசிக்கிறோம். ஆகையால் மோசம்போக்குகிறவர்கள் நம்மை சுற்றி இருக்கிறார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதபுரட்டுகளை தந்திரமாய் நுழையப்பண்ணுவார்கள். அவர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. மேலும், எபிரெயருக்கு எழுதும்போது; ‘‘இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று சொல்லியிருக்கிறதே, கேட்டவர்களில் கோபமூட்டினவர்கள் யார்? மோசேயினால் எகிப்திலிருந்து புறப்பட்ட யாவரும் அப்படிச் செய்தார்களல்லவா? மேலும், அவர் நாற்பது வருஷமாய் யாரை அரோசித்தார்? பாவஞ்செய்தவர்களையல்லவா? அவர்களுடைய சவங்கள் வனாந்தரத்தில் விழுந்துபோயிற்றே’’ என்கிறார் (எபி.3:15-17). பொல்லாத இருதயமுடையவர்கள் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள் என காண்கிறோம். ஆகையால் பொல்லாத இருதயமுடைய ஒருவனும் உங்களுக்குள் இராதபடி பார்த்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்டவர்கள் இருந்தால் அவர்களை விட்டு விலகுங்கள் அல்லது அவர்களைத் தள்ளிப்போடுங்கள்.

கொரிந்து சபையாருக்கு பவுல் எழுதும்போதுகூட அஞ்ஞானிகளுக் குள்ளும் சொல்லப்படாத காரியத்தை ஒரு சகோதரன் செய்தால்; ‘‘அந்த பொல்லாதவனை உங்களை விட்டு தள்ளிப்போடுங்கள்’’ என்கிறார் (1கொரி.5:13). ஐயோ பாவம் என்று யோசிக்கவேண்டியதில்லை. கொஞ்சம் புளிப்புள்ள மாவு முழுவதையும் உப்பப்பண்ணும். ஆகையால் பொல்லாதவர் களுக்கு எச்சரிக்கையாயிருந்து சுத்த இருதயத்தோடு கர்த்தரை தொழுது கொள்ளுங்கள்.



# ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?
## What Must One Do To Be Saved?

-Mohan



பணத்தினாலே, படிப்பினாலோ, மரியாதையினாலே, கௌரவத்தினாலோ அல்லது பொது சேவை செய்வதினாலோ இரட்சிப்பைப் பெற முடியாது.

**1. முதலாவது: நாம் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்பதை வேதாகமத்திலிருந்து தெரிந்துகொள்ள வேண்டும்.**

"கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்து யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்" (அப்.16;21,22). அந்தப்படியாக இயேசுவை விசுவாசித்து பாவமன்னிப்புக்கு என்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டால் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்

வேதாகமத்திலிருந்து சத்தியத்தை தெரிந்து கொண்ட பிறகு முழு மனதுடன் அவற்றை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

"அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது, கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டுபோய்விட்டார், மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்" (அப்.8:39). ஞானஸ்நானம் பெற்று கரையேறியவன் சந்தோஷத்தோடே தன் வழிபோனான். அதைப்போல, சத்தியத்தை ஏற்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டவர்கள் இந்தவிதமான சந்தோஷத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால், தேவனை விசுவாசிப்பதை விட அநேகர் பெருமைப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

**2. ஒரு மனிதன் இரட்சிக்கப்பட மனந்திரும்ப வேண்டும்.**


"நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்.2:38)

a. நாம் எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையை இழந்துவிட்டோம்.

"எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோம.3:23,24). இந்த மீட்பை பெற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுங்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாயிருக்கும்.

b. இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே நம்மை இரட்சிக்கமுடியும்.

"அவரலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்.4:12). வீணானவைகளை பின்பற்றி ஏமாற்றப்பட்டுப்போய்விடாதிருங்கள். வானத்தின் கீழ் இரட்சிக்கப்படும்படி ஒரே நாமத்தையே பிதாவாகிய தேவன் அறிவித்துள்ளார். அது இயேசு என்னும் நாமம். அந்த நாமத்திலே இரட்சிப்பு இருக்கிறது.




# The 3rd World Evangelism Retreat Message by Bro.Jerry

இம்மாதம் 24-ம் தேதி முதல் 26-ம் தேதி வரை காலாண்டு விடுமுறை நாட்களில் நடைபெறும். கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் ரூ50/- செலுத்தி உங்களுடைய பெயரை பதிவு செய்துகொள்ளுங்கள். 1,2 தெசலோனிக்கேயர் மற்றும் யூதா புத்தகங்களிலிருந்து பாடங்களை Bro.Jerry அவர்கள் நடத்துவார்கள். உங்களுடைய பதிவுக்கு முந்துங்கள். தங்குமிடமும், உணவும் "The 3rd World Evangelism Retreat" சார்பாக இலவசமாக வழங்கப்படும். வந்து செல்லும் பயணச்செலவு உங்களுடையது. -தொடர்புக்கு: 94435 58041

B.ARJUNAN, Evangelist
CHURCH OF CHRIST, P.O.Box 5
Batlagundu -624 202, Dindigul Dist, SOUTH INDIA.




**மனிதனுடைய இருதயத்தை நாம் ஆராயமுடியுமா?**

ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்தையும், அதேப்போல இருதயத்தையுடைய மனிதனால் ஆராயமுடியாது. அப்படி ஆராய்ந்து அவனுடைய இருதயத்தில் உள்ளவற்றை சொல்லிவிடுவானேயானால் எல்லாம் வெளிக்குவந்துவிடும். மறைவான விஷயங்கள் ஒன்றுமிராது. நாடு அழிந்துபோய்விடும். அதை நாம் எண்ணிப்பார்க்கும்போது எத்தனை பயங்கரமாக இருக்கிறது. ஆகையால் எல்லாவற்றையும் மனிதர்களுக்கு வெளிப்படுத்தின தேவன், மனிதனுடைய இருதயத்தில் உள்ளவற்றை ஆராய்ந்து அறிகிற அறிவை தாம் ஒருவரே பெற்றவராயிருக்கிறார். ஆகையால், இருதயங்களை உண்டாக்கின கர்த்தர் ஒருவரே ஒவ்வொருவருடைய இருதயங்களையும் ஆராய்ந்து அறிகிறவராயிருக்கிறார் என வேதம் தெளிவாகப்போதிக்கிறது. "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கையின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்" என்கிறார் (எரே.17:10). ஒருவனுடைய நண்பனாலும் அவனுடைய நண்பனின் இருதயத்தை அறியமுடியாது. ஒரே சரீரமாக ஜீவிக்கிற மனைவியினாலும் தன் கணவனுடைய இருதயத்தை அறியமுடியாது. உண்டாக்கின கர்த்தர் ஒருவரே அவைகளை அறிகிறார். உங்களுடைய இருதயங்களை சுத்த இருதயமாக வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## பொது அறிவு சோதனை

1. வைட்டமின் 'சி' யின் வேதிப்பெயர் என்ன?
அ) சிபோபிளவின் ஆ) அஸ்கார்பிக் அமிலம் இ) தயமின்
2. தேசிய ராணுவக்கல்லூரி அமைந்துள்ள இடம்?
அ) சென்னை ஆ) மும்பை இ) டில்லி
3. திறந்தவெளிப் பல்கலைக்கழகம் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட நாடு?
அ) இந்தியா ஆ) அமெரிக்கா இ) பிரிட்டன்
4. டில்லியிலுள்ள செங்கோட்டையை கட்டியவர் யார்?
அ) அக்பர் ஆ) ஜஹாங்கீர் இ) ஷாஜகான்
5. அகல்யாபாய் எந்த நாட்டின் அரசி?
அ) மால்வா ஆ) பீஜப்பூர் இ) ஜெய்ப்பூர்



விடைகள்: 1. ஆ 2. இ 3. இ. 4.இ 5. அ

**எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன் - ரோமர் 13:1**

# இரட்சிப்பைக் குறித்து ....வேதாகமம் என்ன போதிக்கிறது?

## What Does the Bible Say About... Salvation?




(தயவு செய்து வேதவாக்கியங்களை வாசித்து இந்த வினாவை ஆழ்ந்து யோசித்து விடையை சரிபாருங்கள்)

**1. சுவிசேஷம் என்றால் என்ன?**

"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப் படுவீர்கள்; மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்கும். நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளிலே உயிர்த்தெழுந்து..." (1கொரி.15:1-4).

- இரட்சிப்பு
- கிறிஸ்துவில் நம்பிக்கை
- கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் போன்றவற்றின் நற்செய்தி.

**2. ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும்?**

"விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்.16:16).

- விசுவாசத்தை மட்டும் கொண்டிரு.
- மன்னிப்பிற்காக ஜெபியுங்கள்.
- கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் .

**3. விசுவாசம் எப்படி வருகிறது?**

"ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோமர் 10:17).



நன்மைகளுக்காகவும், நம்முடைய சகோதரிகளுக்குச் செய்த நன்மைகளுக்காகவும் ஒருமித்தவர்களாயிருந்து கர்த்தரை மகிமைப்படுத்துவோம். கர்த்தருடைய மகத்துவங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு ஒருவரை ஒருவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாங்கி பலப்படுத்துவோம். அநேகர் ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறவர்கள் கூட சோதனை நேரங்களில் சோர்ந்து போய்விடுகின்றனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நம்முடைய சகோதரிகளிடம் கர்த்தருடைய மகத்துவங்களையும் அன்பையும் சொல்லி ஸ்திரப்படுத்துவோம். கர்த்தர் நம்முடைய அன்பு சகோதரிகளுக்குச் செய்யும் நன்மையான காரியங்களுக்காக ஒருமனதோடுகூட கர்த்தரை மகிமைப்படுத்துவோம். சகோதரிகள் ஒருமித்து வாசம் பண்ணும்போது நன்மையும் இன்பமும் சூழ்ந்துகொள்ளும். இருதயங்களை ஆராய்ந்து அறிகிற கர்த்தருக்கு முன்பாக நம் இருதயம் செம்மையாக இருக்கட்டும். கர்த்தர் தம்முடைய நன்மையினாலும் இன்பத்தினாலும் நம்மை திருப்திப்படுத்துவாராக!

- திருச்சி ஊழியங்களுக்காக...
- இம் மாதம் குமுளியில் நடைபெறுகின்ற 3rd World Evangelism Retreat -க்காக...
- இம்மாதமுதல் 3500 பிரதிகள் அச்சிட தேவன் கிருபை செய்தமைக்காக...
- கடந்த மாதம் சகோ. கனகராஜ் அவர்களின் மகன்கள் சகோ.ஆன்ட்ரு மற்றும் சகோ.பீட்டர் சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள்...
- மாவட்ட ஊழியங்களுக்காக...





**காடு செழித்தால் நாடு செழிக்கும்**

ஒவ்வொரு முறையும் கடிதம் எழுதும்போது அல்லது மணியாடர், காசோலை அனுப்பும்போதும் உங்களுடைய பதிவு என் Ref.No-யை எழுதவும்.

நீங்கள் முகவரி மாறும்போது உங்களுடைய புதிய முகவரி மற்றும் பழைய பதிவு எண்ணையும் தெரியப்படுத்தவும்.

கர்த்தருடைய ஊழியத்தை செய்ய கர்த்தருடைய ஊழியர்கள் தேவை.
உங்களைப் பற்றிய முழுவிபரத்தை செல்போன்மூலமாக தெரியப்படுத்தவும்.
94435 58041
அல்லது
93451 11920
அனுமதி பெற்று வரவும்.

கர்த்தர், ‘‘எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருக்கிறேன்’’ என்கிறார் (ரோமர்9:18) அப்படியிருக்க கிறிஸ்துவுக்குள் ஏக சிந்தையாயிருக்கிற யாவரும் நம் சகோதரிகளிடத்தில் உண்மையான அன்புகூரக்கடவோம். நம் இனம், ஜனம் என்று சொல்லி சுயநலமாய் வாழாமல் கிறிஸ்து, யார் எனக்கு சகோதரர்கள், யார் எனக்குத் தாயார், ‘‘பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்’’ (மத்.12:50) இந்த சிந்தை நமக்குள்ளும் இருக்கட்டும்.

பாருங்கள், எலிசபெத்து மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்தசத்தமாய்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்’’ (லூக்.1:41-45). ஒருவருக்கொருவர் எப்படி வாழ்த்திக்கொள்ளுகிறார்கள்! முதிர்வயதாகிய எலிசபெத்து இளையவளாகிய மரியாளை என் ஆண்டவருடைய தாயார் என்றும், பாக்கியவதி என்றும் சொல்லி வாழ்த்துகிறாள். மூத்தவளாகிய தனக்கு இந்த பாக்கியம் கிடைக்கவில்லையே, நாமும் தானே கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தோம் (வச.6) என்று பொறாமைப்படவில்லை. ‘அன்புக்குப் பொறாமையில்லை’ என்ற வசனத்திற்கேற்ப இருவரும் மாறி மாறி வாழ்த்துவதோடுகூட தேவனையும் மகிமைப்படுத்துகிறார்கள். அது மாத்திரமல்ல, ‘‘மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் அவளுடனே இருந்து, தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்’’ (வச.56) என்று வாசிக்கிறோம். அப்படியானால் கர்ப்பந்தரித்திருக்கிற எலிசபெத்துக்கு மூன்றுமாதம் உதவியாக இருந்திருக்கிறாள் அப்படி உதவியாகயிருந்த நாட்களில் தேவனைக் குறித்தும், அவருடைய மகத்துவங்களைக் குறித்தும் பேசி, தேவனை மகிமைப்படுத்தியிருக்கிறாள். ‘‘என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.... வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது..... தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்;’’ (வச.46-54) என்றெல்லாம் சொல்லி தேவனைத் துதித்து மகிமைப்படுத்துகிறாள்.

அன்பு சகோதரிகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற உங்கள் சகோதரிகள் யாரையாவது கண்டாள் இவ்வாறு கர்த்தருக்கடுத்த காரியங்களைப் பற்றி பேசுகிறீர்களா? அல்லது உலகக் காரியங்களையும், வீணான பேச்சுகளையும் பேசி ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறீர்களா? காலஞ்செல்லாததாயிருக்கிறபடியால் காலத்தைப்பயன்படுத்திக் கொள்வோம், கர்த்தர் நமக்குச் செய்த



♍ ஒரு வெளிப்பாட்டை காண்பது மூலம்.

♍ தேவனுடைய வார்த்தையைக் கேள்விப்படுவதன் மூலம்.

♍ கர்த்தர் தனிப்பட்ட விதத்தில் ஒருவனுடன் பேசுவதின் விளைவுபடி.

**4. மனந்திரும்புதல் என்றால் என்ன?**

ஒரு தகப்பன் தன் மகனை தன்னுடைய தோட்டத்திற்குச் சென்று வேலை பார்க்கும்படி கேட்டுக்கொண்டான். "அதற்கு அவன்: மாட்டேன் என்றான்; ஆகிலும், பின்பு அவன் மனஸ்தாபப்பட்டுப் போனான்" (மத்.21:29). மனந்திரும்புதல், என்பது ஒரு மனம் மாற்றம், மனந்திரும்புகின்ற செயல் மேலும் வேறொரு வழியில் சென்றுகொண்டிருத்தல் ஆகும். பவுல் இதை இவ்வழியாக விளக்குகிறார்: "திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிரயாசப்படக்கடவன்" (எபே.4:28).

♍ ஒருவனுடைய பாவங்களை அறிக்கையிடுதல்.

♍ மன்னிப்பிற்காக கர்த்தரை நோக்கி கேட்பது.

♍ ஒருவனுடைய பாவங்களிலிருந்து திரும்புதல்.

**5. ஒருவன் செய்ய வேண்டிய அறிக்கை என்ன?**

எத்தியோப்பியாவிலிருந்து ஒரு மனிதன் வந்தபோது அவன் முழு மனதுடன் விசுவாசித்தால் என்று அவன் வினவப்பட்டபோது அவன் ஞானஸ்நானம் பெற்று கொள்ளும்படி விரும்பினான், "அதற்கு பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி" (அப்.8:37). பிறகு பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அறிக்கை மனிதருக்கு முன்பாக வாயினால் உருவாக்கப்படவேண்டியிருக்கிறது. (ரோம.10:10; மத்.10:32).

♍ அது இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது.

♍ அது ஏற்கனவே தன்பிழைக்காக மனந்திரும்பின விசுவாசி இரட்சிக்கப்பட்டிருக்கிறான்.

♍ ஒருவனுடைய பாவங்களின் அறிக்கை.

**6. ஞானஸ்நானம் அவசியமானதா?**

"அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்பொழுது நம்மையும் இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1பேது.3:21). "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோம.6:3). "நாம்

யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்" (1கொரி.12:13). இங்கு சரீரமே சபையாக இருக்கிறது (கொலோ.1:18).

♍ ஞானஸ்நானம் என்பது இரட்சிப்பின் அடையாளம்.

♍ ஞானஸ்நானம் தேவையில்லை.

♍ ஒருவன் முழு இருதயத்துடன் கிறிஸ்துவை விசுவாசித்தால், அவன் கிறிஸ்துவுடனும் அவருடைய சரீரமாகிய சபையோடு இணைக்கப்படும்படிக்கு, அவன் ஞானஸ்நானம் பெறும்படி தயாராயிருக்கிறான்.

**7. ஞானஸ்நானம் என்றால் என்ன?**

"ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோ.2:12). "இரதத்தை நிறுத்தச்சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்" (அப்.8:38).

♍ தண்ணீரில் அடக்கம்.

♍ தண்ணீரைத் தெளித்தல் அல்லது ஊற்றுதல்.

♍ ஒரு அடையாளமான சைகை.

**8. வேதாகமத்தில் 'ஒருமுறை இரட்சிக்கப்பட்டவர், எப்போதும் இரட்சிக்கப்பட்டுள்ளார்" என்ற கோட்பாடு போதிக்கப்பட்டுள்ளதா?**

"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1கொரி.10:12). "கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது" (2பேது.2:20-22).

♍ ஆம்.

♍ இல்லை.

♍ பதில் தெளிவாக இல்லை .



# எத்தனை நன்மை! எத்தனை இன்பம்!!

## How Good! How Pleasant!!

-Glory Arjunan



எத்தனை நன்மை, எத்தனை இன்பம் சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணும் போது என்று சங்கீதக்காரனாகிய தாவீது 133-ம் சங்கீதம் 1-ம் வசனத்தில் மிக அழகாய் பாடியுள்ளார். அன்பு சகோதரிகளே, இந்த நன்மையும் இந்த இன்பமும் எப்போது வரும்? ஒருமித்து வாசம்பண்ணும் போது. ஏக சிந்தையுள்ளவர்கள் அதாவது ஒரே காரியத்தைக் குறித்த விருப்பமுள்ளவர்கள் தான் ஒருமித்து இருக்கமுடியும். இவ்விதமான ஒருமித்த சிந்தனை ஆவிக்குரிய அல்லது தேவனுக்கடுத்த சிந்தனையாயிருக்கும் போது நிச்சயமாகவே நன்மையும் இன்பமும் நம்மை சூழ்ந்து கொள்ளும். இத்தகைய சிந்தைகொண்டிருந்த இரு சகோதரிகளைக் குறித்து லூக்.1:36-56 வரை வாசிக்கலாம்.

மரியாளும் எலிசபெத்தும் ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள். ஆனால் இவர்கள் தங்கள் இனம் ஜனத்தைக் குறித்த சம்பாஷனையில் ஈடுபடவில்லை. இனத்தைக் குறித்த பெருமைகளையோ அல்லது வேறு எந்த உலகப்பிரகாரமான காரியத்தை பற்றியோ சம்பாஷிக்கவில்லை மாறாக இருவரும் தேவபக்தியுள்ள வர்களாய் தேவனையே புகழ்ந்து பேசிக் கொண்டிருந்ததை இவ்வசனங்களில் வாசிக்கிறோம். தேவதூதனால் அறிவிக்கப்பட்ட படி தன் இனத்தாளாகிய எலிசபெத்து தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள் என மரியாள் கேள்விப்பட்டு யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் (எலிசபெத்தின் கணவன்) வீட்டிற்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள் என வாசிக்கிறோம். எப்பேர்பட்ட அன்பு! முதிர்வயதாகி மலடியாயிருந்த எலிசபெத்தைக் கர்த்தர் கடாட்சித்துள்ளார் என்று கேள்விபட்டு தீவிரமாய் போய் அவளை வாழ்த்தி யிருக்கிறாள். அன்பு சகோதரியே, சற்றே இக்காலத்து சகோதரிகளைக் குறித்து சிந்தித்துப்பார்ப்போம். இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறேன் எனச் சொல்லிக் கொள்ளுகிற சகோதரிகள் கூட கர்த்தர் மற்றவர்களுக்கு அருளிச் செய்யும் ஆசீர்வாதங்களைக் குறித்து பொறாமைப்படுகின்றனர். பொறுக்க அவர்களுக்கு மனதில்லாது போகிறது. பவுலுங்கூட 'என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள்' என்று ரோமர்16:11-ல் எழுதுகிறார். ஆனால் அநேகர் இனத்தாரையும் வாழ்த்துவதில்லை கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற சகோதரிகளையும் வாழ்த்துவதில்லை. அநேகர் மற்றவர்கள் வாழ பொறுக்காதவர்களாகவே இருக்கின்றனர். ஆனால்

அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத் தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்.....அன்றியும், **அவர்** ஜனத்தின் பாவங்களை நிவர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கும் எவ்விதத்திலும் **தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியிருந்தது**'' (எபி.2:11,14,15,17).

``......**கிறிஸ்துவோ** அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான **குமாரனாக** உண்மையுள்ளவராயிருக்கிறார்; ...நாமே அவருடைய வீடாயிருப்போம் ......கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்''(எபி.3:6-14). கிறிஸ்து தம்மைத்தாமே வெறுமையாக்கி, மனுஷசாயலானது போல, அவருடைய சகோதரரும் கிறிஸ்துவினுடைய சகல பரிபூரணத்தினால் நிறையப்படும்போது அவர்களும் திவ்விய சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாக மாறுவார்கள்!

``தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, **திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு**, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது'' (2பேதுரு1:3,4).

``**நீங்கள்** அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், **தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும்**...'' (எபே.3:19). தேவன் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களை ``.....தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்'' (ரோம.8:29).

``உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா?..... கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்'' (1கொரி.6:15,17).

எனவே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனிதவர்க்கத்திற்காக தொடர்ந்து மத்தியஸ்தராய் கிரியை நடப்பிக்கும்படிக்கு பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றிருக்கிறார். 1தீமோத்தேயு2:5-ன்படி, **கிறிஸ்து இயேசு மனுஷனாக** தேவனுடைய வலதுபாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். அவர் தேவனுடைய குமாரனாகவும், மனுஷகுமாரனாகவும்: உயிர்த்தெழுந்து, மறுரூபமாக்கப்பட்ட நமது இரட்சகராகவும் இருக்கிறார். நாமனைவரும் ஆவிக்குரியபிரகாரமாக அவருக்குள் ``திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக மாறியிருக்கிறோம்''.



**9. இரட்சிக்கப்பட்டவர்கள் எங்கே இருக்கிறார்கள்?**

"...இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்" (அப்.2:47).

♍ இயேசு இரட்சிப்பதற்கென மரித்ததால் இரட்சிக்கப்படுகிற அனைவரும் சபையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

♍ ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவார்கள்.

♍ எல்லா குழுக்களிலும் இரட்சிக்கப்பட்ட மக்கள் உள்ளனர் .

**10. கிறிஸ்துவின் சபை இன்று இருக்கின்றதா?**

"... பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்" (தானி.2:44,45; அப்.2; மத்.16:17,18).

♍ இல்லை.

♍ ஆம், ஞானஸ்நானம் பெற்ற சபை அங்கத்தினர்கள் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்தவர்களாகயிருக்கிறார்கள்.

கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டு, உங்களுடைய பாவங்களுக்காக

**வேத அறிவுப்போட்டியின் விடைகள்**

| | |
|---|---|
| 1. வேசி | - 1தெச.4.3 |
| 2. கர்த்தருடைய செயல் | - ஆப.2;13 |
| 3. பாவ மனுஷன் | - 2தெச.2;3 |
| 4. இஸ்ரவேலர் | - செப்.3:12 |
| 5. ஆம் | - 1தீமோ.5:16 |
| 6. செருபாபேல் | - ஆகா.2:23 |
| 7. யந்நேயும், யம்பிரே | - 2தீமோ.3:9 |
| 8. எருசலேமை | - சகரி.2:12 |
| 9. பவுல், தீத்து | - தீத்து 3;13 |
| 10. லேவியின் | - மல்.2:8 |

**ஞானவான்கள் கனத்தைச் சுதந்தரிப்பார்கள் - நீதி.3:35**

**வேத அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்கள்**

| | |
|---|---|
| 1. Tmt.மரகதம் திரவியம் | -கோம்பை |
| 2. T.ராஜாத்தி | -கோம்பை |
| 3. Mrs.மோரிடக்லஸ் | -கோவை |
| 4. P.சரவணகுமார் | -கோபி |
| 5. M.பொன்னுசாமி | -மேலகுறிச்சி |
| 6. R.கிப்ட்ராஜாமணி | -தூத்துக்குடி |
| 7. R.கஸ்தூரி | -தூத்துக்குடி |
| 8. R.ராமச்சந்திரன் | -தூத்துக்குடி |
| 9. S.R.பெரியசாமி | -நாமக்கல் |
| 10. A.ரெபேக்காள் | -மதுரை |
| 11. A.ஜோதிகாந்தம் | -போடபாறை |
| 12. S.சார்லஸ் | -கோடை |
| 13. Mrs.ஜாஸ்மின் | -மதுரை |

**ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள் -மத்.5:3**

நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே
அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ
அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட
உட்காரும்படிக்கு அருள் செய்வேன் - வெளிப்படுத்தல் 3:21

பெண்கள் பகுதி

# இயேசு கிறிஸ்து நித்திய பலி

## Jesus Christ the Eternal Sacrifice

*-Betty*



நம்முடைய சரீரப்பிரகாரமான பிறப்பில் நாம் விரும்புகின்ற ஒரு குடும்பத்தில் பிறக்க அந்தக் குடும்பத்தைத் தெரிவு செய்ய இயலாது. நாம் நம்முடைய பிறப்பிற்குப்பின் வெளிப்படையாக நாம் பிறந்த அந்த குடும்பத்தின் அங்கமாக இருந்து கொண்டிருக்கிறோம்.

ஆவிக்குரிய பிரகாரமாக, நாம் எந்தக்குடும்பத்தின் அதாவது தேவனுடைய அல்லது சாத்தானுடைய குடும்பத்தின் அங்கமாக இருப்போம் என்பதைத் தெரிவு செய்து கொள்கிறோம். வெறுமனே தெரிந்துகொள்வதினால், தேவனுடைய பிள்ளையாக நம்மை மாற்றிக்கொள்ளுகிறதில்லை. அவருடைய குடும்பத்திற்குள் பிறக்க நாம் தண்ணீரின் பிறப்பு மற்றும் ஆவியின் பிறப்பாகிய ஞானஸ்நானம் என்ற பிறப்பிற்கான வழிமுறையின் வழியாகச் செல்லவேண்டும்.

1பேதுரு1:22,23 மற்றும் 2:1:2 இந்த ஆவிக்குரிய பிறப்பைப் பற்றி மேலும் தெளிவுப்படுத்துகிறது: "…..ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே…… அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே… இப்படியிருக்க…..நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்".

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை (கிறிஸ்துவை) ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால் பிறந்தவர்கள்" (யோவா.1:12,13).

"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே…நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்களே….. மேலும்



நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலா.3:26,27;4:6,7).

**கிறிஸ்துவின் சகோதரத்துவத் தொடர்ச்சி**

வேதவாக்கியங்களில் கிறிஸ்து பரத்திற்கு எழுந்தருளின பிறகு, கிறிஸ்துவோடுகூட நம்முடைய சகோதரத்துவத்தின் மூலம் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான நம்முடைய உறவினை ஏற்படுத்தி தேவனுக்கும் கிறிஸ்துவுக்குமிடையேயுள்ள முடிவில்லா பிதா-குமாரன் உறவினை பல குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன:

இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாகவும் மனுஷகுமாரனாகவும் மாம்சத்திலே பிறந்தார். அவர் வானத்துக்கு ஏறெடுத்துக்கொள்ளப்பட்ட இரட்சகராக, தேவனுடைய குமாரனாகவும் அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் பிறந்திருக்கிறவர்களுக்கு சகோதரராகவும் நிலைத்திருக்கிறார். அவரோடுள்ள சகோதரத்துவத்தின் மூலமே நாம் தேவனுடைய குமாரர்களாக அழைக்கப்படக் கூடியவர்களாயிருக்கிறோம்.

"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; **தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன்சுதந்தரருமாமே;** கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்" (ரோம.8:16,17). யோவான்1:1-14-ன்படி ஆதியிலிருந்தே, வார்த்தை தேவனோடிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது, இந்தக்கூற்று தேவத்துவத்தில் சமத்துவத்தைக் காட்டுகின்றது. மேலும் அந்த வார்த்தை தம்மை வெறுமையாக்கி (பிலி.2:7), மனுஷ சாயலாகி, தேவனுடைய குமாரனாகத் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவராய் தம்மைத் தாமே தாழ்த்தி, தேவனுடைய முதற்பேரானவராகி தேவனுடைய சுதந்தரரானார். இதைப்போல தேவனுடைய ஆவிக்குரிய குடும்பத்திற்குள் பிறப்பதன் மூலம் நாம் கிறிஸ்துவினுடைய சகோதரரும், சகோதரிகளுமாக மாறும்போது, நாம் தேவனுடைய ஜனங்களும் கிறிஸ்துவுடனேகூட சுதந்தரருமாக இணைக்கப்படுகிறோம்.

"எப்படியெனில், பரிசுத்தஞ்செய்கிறவரும், பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதனிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; …..ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும்